<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்., திருவொற்றியூர்</u>

**<u>OS.No. 42 / 2021</u>**

இந்நீதிமன்றத்து மூன்றாம் நிலை எழுத்தர் திருமதி. அம்பிகா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஜுலை 18-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது,

தேதி - **18.07.2024**

பெயர் - முனுசாமி

சாட்சி - DW1

விசாரணை தொடங்கும் நேரம் :- **11.05 AM**

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :-

27. எனக்கு தமிழ் படிக்க தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படுவது வட்டாச்சியர் வழங்கிய கலப்பு திருமண சான்று என்று சொன்னால் எனக்கு தெரியாது ஏனென்றால் எனக்கு தமிழ் படிக்க தெரியாது. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ**2** ஆவணமான வரி ரசீதில் முகவரியாக 81/16A என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது 81/16, 2 வது தெரு ஆகும்.

28. வாதி ராஜலட்சுமி என்பவர் எனக்கெதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றாலும் புகார் மனு எண் 156/2020 என்று சொன்னால் எனக்கெதிராக புகார் எதுவும் இல்லை அவ்வாறு புகார் கொடுத்திருந்தால் என்னை அழைத்து விசாரித்திருப்பார்கள். அதே போன்று வாதி ராஜலட்சுமி எனக்கெதிராகவும் மேலும் 5 நபர்களுக்கு எதிராகவும் புகார் கொடுத்திருந்தார் என்றாலும் அந்த புகார் மனு எண் 209/2020 என்று சொன்னால் இல்லை எனக்கெதிராக புகார் எதுவும் இல்லை.

29. மேலும் வாதி ராஜலட்சுமி எனக்கெதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றாலும் அந்த புகார் எண் 697/2021 என்று சொன்னால் இல்லை. எனக்கெதிராக புகார் இல்லை. தொடர்ச்சியாக எனக்கெதிராக புகார் கொடுக்கப்பட்டதால் காவல் ஆய்வாளர் தன்னிச்சையாக முதல் தகவல் அறிக்கை எண் 181/2020 ஒன்றை பதிவு செய்தார் என்பது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வாதியின் வீட்டிற்கு மின்இணைப்பு துண்டிக்கப்பட்டதால்

அவர் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் நீதிபேராணை மனு தாக்கல் செய்து மின் இணைப்பு பெற்றார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர்களாகவே மனு தாக்கல் செய்து உத்தரவு பெற்றார்கள். என்வீட்டில் எப்படி மின்இணைப்பு பெற்றீர்கள் என்று நான் கேட்டேன். (பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் மேற்படி ஆவணம் குறித்து வாதி தன்னுடைய வாதுரையில் குறிப்பிடப்படவில்லை என்று தன்னுடைய ஆட்சேப்பணையை தெரிவித்தார் மேற்படி ஆட்சேப்பணையோடு தற்போது இந்த கேள்வி மற்றும் பதில் பதிவு செய்யப்படுகிறது.)

30. மின்இணைப்பு தரும் போது யார்யார் அவ்விடத்தில் இருந்தார்கள் என்றால் அது எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. தற்பொழுது இருக்கும் வீட்டில் வாதி சிசிடிவி கேமிரா அமைத்துள்ளார் என்று சொன்னால் ஆமாம். வா.சா.ஆ 7 ஆவணமாக மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் உத்தரவுப்படி தான் மின் இணைப்பு அமைத்தார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வாதியோ அல்லது நானோ ஒரு வீட்டில் குடியிருந்தால் என்னென்ன ஆவணங்கள் வைத்திருப்போம் என்றால் குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அடையாள அட்டைமற்றும் கழிவுநீர் குடிநீர் ஆகியவற்றிற்கான வரி ரசீதுகள் வைத்திருப்போம். குடும்ப அட்டை வாக்காளர் அடையாள அட்டை ஆகியவை வழங்கப்படும் போது நேரடியாக வந்து விசாரித்து அதன்பிறகு தான் வழங்குவார்கள் என்று சொன்னால் ஆமாம்.

31. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ14 ஆவணம் குடும்ப அட்டை தானே என்றால் ஆமாம். வாதி ராஜலட்சுமிக்கு இருப்பிட சான்று வழங்க விசாரிக்கப்பட்ட போது நான் அங்கு இருந்தேனா என்றால் நான் அங்கு இல்லை. வா.சா.ஆ 10 ஆவணமான வாதியின் பிறப்பு சான்று வழங்க விசாரிக்கப்பட்ட போது நான் அங்கு இருந்தேனா என்றால் நான் அங்கு இல்லை. வாதி எரிவாயு சிலிண்டர் பெற்ற போது நான் அங்கு இருந்தேனா என்றால் நான் அங்கு இல்லை. வாதி தற்பொழுது தனியாக மின் இணைப்பு வைத்துள்ளார் என்று சொன்னால் ஆமாம்.

32. அரசு ஆவணங்கள் வாதிக்கு வழங்கப்பட்ட போது நான் அங்கு இல்லாததால் எனக்கு அது பற்றி தெரியாது என்று சொன்னால் எனக்கு அவை பற்றி தெரியாது. மேற்படி ஆவணங்கள் வழங்கப்பட்டது குறித்து எனக்கு தெரியாததால் நான் அந்த இருப்பிடத்தில் குடியிருக்கவில்லை என்று சொன்னால் அது தவறு நான் அந்த இடத்தில் தான் குடியிருக்கிறேன். நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் அந்த இடத்தில் தான்.

33. தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.ஆ1 ஆவணமான வருவாய் கோட்டாச்சியர் வழங்கிய விசாரணை அழைப்பாணையில் கதவு எண் 81/16 A என்று குறிப்பிடப்பட்டுள்ளது

என்று சொன்னால் கதவு எண் 81/16 என்பது தான் உள்ளது 16A என்று எதுவும் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.ஆ 2 ஆவணமான வருவாய் கோட்டாச்சியரின் செயல்முறை ஆணையில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் உண்மையா என்றால் அது எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.

34. காளியம்மாள் என்பவர் நீதிபேராணை எண் 13381/2023 என்ற மனுவினை மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றாலும் அதற்கான அழைப்பாணை வரவில்லையா என்றால் அது எனக்கு தெரியாது. ஆர்.டி.ஓ புகாரிலும் அதற்கான விசாரணை அழைப்பாணையும் எனக்கு வரவில்லை என்று சொன்னால் ஆமாம். சிசிடிவி கேமிரா பொருத்துவதற்கும் மற்றும் அதற்கான உத்தரவிற்கான வழக்கிலும் நான் இல்லை என்றால் ஆமாம்.

35. ஆர்.டி.ஓ உத்தரவு எதிர்த்து காளியம்மாள் மற்றும் இமயவரம்பன் ஆகியோர் தாக்கல் செய்த நீதிப்பேராணை மனுவில் நான் ஒரு தரப்பினர் இல்லை என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அந்த வழக்கு சம்மந்தமான விவரங்களை பற்றி காளியம்மாள் மற்றும் இமயவரம்பன் ஆகியோர் என்னிடம் சொல்லியுள்ளார்களா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. நான் கதவு எண் 81/16 என்ற முகவரியில் குடியிருக்கிறேன் என்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை.

36. மேற்சொன்ன புகார்கள் மற்றும் வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாத காரணத்தினால் நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அருகதை இல்லை என்று சொன்னால் அது தவறு. முதல் பிரதிவாதி காளியம்மாள் பத்து ஆண்டுகளாக மனநலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்றாலும் மேலும் இரண்டாம் பிரதிவாதி இமயவரம்பன் இந்நீதிமன்றத்த்திற்கு வருவதில்லை என்றாலும் நான் தான் வேண்மென்றே இந்த வழக்கை வழக்காடிவருகிறேன் என்று சொன்னால் அது தவறு வாதி தான் என்மீது வழக்கை தாக்கல் செய்துள்ளார். குறுக்கு விசாரணை முடிந்தது.

<u>விசாரணை முடியும் நேரம் :</u>- **11.52 AM**